விலை ரூபா: 8.00

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:– பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி 17 | வியாழக்கிழமை (03.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 319



ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து


## யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு பொலிஸார் மீது வெவ்வேறு மூன்று குண்டுத் தாக்குதல்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு வெவ்வேறு மூன்று இடங்களில் கைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கரவெட்டி, அச்சுவேலி மற்றும் நாவாந்துறை ஆகிய இடங்களிலேயே இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தாக்குதல்கள் அனைத்தும் பொலிஸாரை இலக்குவைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். முஸ்லிம் பள்ளிவாசலுக்கு பின்னாலுள்ள பொலிஸாரின் அரண்மீது நேற்றிரவு 9 மணியளவில் இனந்தெரியாதோரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலை அடுத்து பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கரவெட்டி மாலுசந்தியிலுள்ள பிரதேச செயலகத்துக்கு அருகில் நேற்றிரவு 9.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்தனர். இதனையடுத்து அப்பகுதியெங்கும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

அச்சுவேலி தபால் நிலையத்தில் வாக்குச் சீட்டுக்கான பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸார் மீது நேற்றிரவு (12 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்குக் கிழக்கிலிருந்து ஆயுதக் குழுக்கள் வெளியேற்றம்

## கண்காணிப்புக்குழுவின் யோசனை அரசாங்கத்தினால் நிராகரிப்பு!

(கொழும்பு)

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களை வடக்குக் கிழக்கிலிருந்து அகற்றுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்வைத்த யோசனையை அரசாங்கம் நிராகரித்துள்ளது. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு பொறுப்பாளர் ஸ்டீன் ஜோர் ஜெய்சன் முன்வைத்த யோசனையே நிராகரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் விடுதலைப் புலிகள் மீது இடம்பெறும் தாக்குதல் சம்பவங்களினை அடுத்து அரச பகுதிகளில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுக்கள் வெளியேற்றப்படவேண்டுமென கண்காணிப்புக்குழு யோசனை வெளியிட்டிருந்தது.

அந்த யோசனை அரசாங்கத்திடம் பரிந்துரைக்கப்பட்டபோது அதனை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இதேவேளை கிழக்கிலி-- ருக்கும் தமிழ் உளவாளிகள் வலையமைப்பை முழுமையாகச் செயலிழக்கச் செய்யும் விடுதலைப் புலிகளின் தேவைகளுக்கு ஏற்பவே அந்த அதிகாரி செயற்படுவதாக இராணுவ உளவுப் பிரிவு குற்றஞ்சாட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலின்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் எமது பகுதிகளை கண்காணிக்கலாம்

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட தாம் ஒருபோதும் தடைவிதிக்கமாட்டோமென விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் எம்மீதான தடையினை விதித்துள்ளது. எனினும் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர். அவர்கள் எமது பகுதிகளிலும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடலாமென அவர் நோர்வேத் தூதுவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எவ்வாறு கண்காணிப்பில் ஈடுபடுகிறார்களோ அதேபோல் எமது பகுதிகளிலும் கண்காணிப்பினை மேற்கொள்ளமுடியும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் சொர்ணத்துடன் எம்.பிக்கள் சந்திப்பு

(திருகோணமலை)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி சொர்ணத்திற்குமிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தின் தற்போதைய நிலைபரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் துரைரட்ணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். இச்சந்திப்பின்போது மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மற்றும் திருகோணமலை மாவட்ட பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ச–8)

## மட்டக்களப்பில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு விநாயகபுரத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் இனந்தெரியாத நபர்களின் சூட்டுக்கு குடும்பஸ்தர் ஒருவர் பலியாகி உள்ளார்.

கல்குடா விஷ்ணுகோயில் வீதியைச் சேர்ந்த செல்லத்தம்பி புண்ணியமூர்த்தி (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினரான இவர் நேற்றுக்காலை வீட்டில் இருந்து ஆழிப்பேரலை நிவாரணநிதி பெறுவதற்கு வங்கிக்குச் சென்று கொண்டிருந்தபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை செங்கலடி –பதுளைவீதி கொடுமாவடு பொலிஸ்நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் கடந்த 31ஆம் திகதி மாலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கண்காணிப்பில்ஈடுபடுவதற்கு சர்வதேசம் அக்கறையாக இருக்கிறது

### ஜப்பான் தூதுவர் அக்கியோ சூடா

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெறுவதற்கு சர்வதேச சமூகம் அக்கறையுடன் இருப்பதாக ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்கும் உள்நாட்டு அமைப்புக்கு 11 மில்லியன் ரூபாவினை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அக்கியோ சூடா இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானம், அபிவிருத்தி, நல்லாட்சி என்பவற்றை உறுதிப்படுத்த தேர்தல் நீதியாக நடைபெறுவது அவசியம். இலங்கையின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊடகங்களில் பாரபட்சம் ஜனாதிபதிக்கு ரணில் கடிதம்!

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களுக்கும் அரசாங்க ஊடகங்களில் நியாயமானதும் சமனானதுமான சந்தர்ப்பத்தை வழங்குவதன் அவசியத்தை வலியுறுத்தி ஐ.தே.கட்சியின் தலைவரும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஜனாதிபதித்தேர்தலின்போது அரசாங்க ஊடகங்களில் வேட்பாளர்களுக்கு சமசந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமாயினும் இதுவரை அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

### இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில்

# எனது யோசனைகளை அன்று எதிர்த்த ஐ.தே.க இன்று அதனை ஏற்றுக்கொண்டமை வெற்றியாகும்

### -ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்



பில் தான் எப்போதோ முன்வைத்த யோசனைகளை அன்று எதிர்த்த ஐ.தே.க.இன்று அதனை ஏற்றுக் கொண்டிருப்பது தனக்கு பெரும் வெற்றியை தந்துள்ளது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

பிபில என்னுமிடத்தில் அவரது சேவையை கௌரவித்து நடாத்தப் பட்ட உபசார நிகழ்வில் உரையாற றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் இப்பொழுது பிரதான இரு கட்சி களும் ஒரே கொள்கையை பின் பற்றுகின்றன. இந்த நாட்டிற்கு சமா தானம் ஏற்படவேண்டும் என்று நான் எப்பொழுதுமே வலியுறுத்தி வந்திருக்கின்றேன்.

யுத்தம் மூலமாகவன்றி பேச்சு வார்த்தைகள் மூலமாகவே தீர்வு கிடைக்கமுடியும் என்பதே எனது நம்பிக்கை நாட்டின் மிகப்பெரும் பான்மை மக்கள் போரை நிராகரித் துள்ளனர். எனது கட்சியின் அடிப் படைக் கொள்கையாக இருப்பது அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப பிரச்சனைக்குத் தீர்வு காண்பது என்ப தாகும். அதிகாரமானது அரசியற் சட்டரீதியாகவும் அதேவேளை நடைமுறையிலும் பரவ லாக்கப்பட வேண்டும் நான் முன்வைத திருந்த யோசனைகள் நாட்டை பிளவுபடுத் தாதவகையில் நாட்டின் ஐக்கியத்தை பேணுவதற்கேற்றவை என்றும் ஜனாதிபதி அங்கு உரையாற்று கையில் மேலும் குறிப்பிட்டார்.(ந-6)

### 'பொங்குதமிழ்' நூல் அறிமுக விழா

கனகரவியின் "பொங்கு தமிழ் நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை பிற்ப கல் 3.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் முதற்பிரதியை யாழ் மாநகரசபை ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம வழங்க கலாநிதி சிதம்பரநாதன் அத னைப் பெற்றுக்கொளவார்.

மதிப்பீட்டுரையை எழுத்தாளர் பொன்.கணேசமூர்த்தியும், சிறப்பு ரையை யாழ்மாவட்ட சட்டத்தரணியும் பதில் நீதிபதியுமான பொன்.பூலோ கசிங்கமும் வழங்கவுள்ளனர். (ந-9)

### பசுமாடுகள் திருட்டு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தம்பாட்டி பகு தியில் அண்மைக்காலமாக பசு மாடுகள் திருடப்பட்டு காரைநகர் வழியாக கடத்தப்படுவதாகத் தெரி விக்கப்படுகிறது.

கடந்த வாரம் தம்பாட்டி பகுதி யிலிருந்து இரு பசு மாடுகள் திருட் டுப்போயுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

(ந-72)

## 13 வெளிநாடுகளுக்கான நேரடி தொ.பே சேவை ரத்து

(கொழும்பு)

பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 13 வெளிநாடுகளுக்கான நேரடித் தொலைபேசி சேவையை தொலைத தொடர்புத்துறை இரத்துச் செய் துள்ளது.

தொலைபேசி இணைப்புக்களு டாக பாரிய முறைகேடுகள் நடை பெற்று வருவதாகவும் பாலியல் தொடர்பிலான இணையத் தளங் களின் தொலைபேசி சேவைக்கு சட்டவிரோதமாக தொலைபேசி இணைப்புகள் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் தகவல்கள் வெளி யாகின.

இதையடுத்தே இந்த முடிவை அரசாங்கம் மேற்கொணடதா தொலைத்தொடர்புத்துறை ஒழுங்கு முறை ஆணையததின் தலைவர் அனுர அமரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த இரத்து மூன்று மாதங்க ளுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கிரிபதி, சொலமன் தீவுகள் பப்புவா, நியூகினியா, மேற்கு சமோவா, வனு வது, நாவ்ரு, கூக்தீவுகள், டொகெலு மற்றும் நியூசிலாந்து நாட்டவரே இத்தகைய முறைகேடுகளில் ஈடு பட்டுவருவதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## தேர்தல் உத்தியோகத்தர்களை தெரிவுசெய்யும் பணிகள் ஆரம்பம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் பணிகள் தற்போது ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் செய லகம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் கள் மூலம் தேர்தல் குறித்த நடை முறைகள் அமுல்படுத்தப்படும்.

காரியாலய உத்தியோகத்தர் களின் பெயர்களை தேர்தல் செய லகம் வெளியிடும். தேர்தல் செய லக ஆலோசகர் ஏ.டி.சில்வா இது பற்றித் தெரிவிக்கையில்,

சகல வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களும் எதிர்வரும் 10ஆம் திகதியளவில் இலங்கைக்கு வந்துவிடுவார்கள். தேர்தல் கண் காணிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான ஐரோப்பிய ஒன் றியத்தின் தேர்தல் கண்கணிப் பாளர்கள் குழு ஏற்கனவே இங்கு வந்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ஆசிய தேர் தல் அதிகாரிகள் சங்க உறுப்பினர் கள் ஆகியோர் எதிர்வரும் நாட்க ளில் இங்குவந்து சேருவார்கள் என்றார். (ந-7)

## விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் நேர்மையான தேர்தல் நடைபெறும்

### -தேர்தல் கண்காணிப்பு நிலையத் தலைவர்

தேர்தல் வன்முறை தொடர்பாக நேற்றுவரை 171 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

வேட்புமனுக்கள் தாக்கல் செய் யப்பட்ட நாளிலிருந்து இதுவரை 171 தேர்தல் வன்முறைச் சம்பவங் கள் பதிவாகியுள்ளதாக தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலை யத்தின் தலைவர் கலாநிதி பாக் கியசோதி சரவணமுத்து தெரிவித் துள்ளார்.

இவற்றில் மிகப் பாரதூரமான சம்பவங்கள் குறித்து 57 முறைப் பாடுகளும் சிறு சம்பவங்கள் பற்றி 114 முறைப்பாடுகளும் தாக்குதல் குறித்து 37 முறைப்பாடுகளும் பதி வாகியிருப்பதாகவும் பெருமளவான தாக்குதல் சம்பவங்கள் கம்பஹா மாவட்டத்திலேயே நடைபெற்றுள் ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைகளில் வடக்கு -கிழக்குப் பிரதேசத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட் டுள்ளதாகவும் இதுவே இதுவரை இடம்பெற்றிருக்கும் மிகப் பாரதூர மான சம்பவம் என்றும் அவர் தெரி வித்துள்ளார். ஏனைய தேர்தல் பிர சாரக் காலஙகளுடன் ஒப்பிடுகை யில் இம்முறை தேர்தல் காலத் தில் வன்முறைகள் குறைந்தளவி லேயே இடம்பெற்றுள்ளன.

தேர்தல் ஆணையாளரும் பொலி ஸாரும் எடுத்த நடவடிக்கைகள் இதற்கு உதவியாக அமைந்துள் ளன. விடுதலைப் புலிகளின் பிர தேசத்தில் நேர்மையான தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படு கிறது என்றும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ந)








யுனிசெவ் ஆதரவுடன் யாழ்.சமூக செயற்பாட்டு மையத தினால் அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில 'சிறுவர் கலைக்கதம்பம்' நிகழ்வு நடாத்தப்பட்டது.

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினூடாக பருத்தித் துறை, மருதங்கேணி, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப பழை, கோப்பாய், யாழ்ப்பாணம், சாவகச்சேரி போன்ற பிரதேச செயலகப்பிரிவுகள் அமைந்துள்ள இடங்களில இயஙகிவரும் 62 சிறுவர் கழகங்களில் இருந்து 700ற்கும் மேற்பட்ட சிறுவர்கள் அழைக்கப்பட்டு மிகப்பிரமாண்டமான அளவில் மைதான நிகழ்வுகளும், அரங்க கலை நிகழ்வு களும் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டன. இந்நிகழ வுக் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

## முஸ்லிம்களின் உரிமை உறுதி செய்யப்படும்

### -பிரதமர் உறுதிமொழி

இந்த நாட்டில் முஸ்லிம் மக் கள் சுதந்திரமாகவும் சமாதானமாக வும் வாழும் உரிமை உறுதி செய் யப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை அக் குறணையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரை யாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை யாற்றுகையில், வடக்கு-கிழக்கிலி ருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை அவர்கள் சொந்த இடங்களில மீளக் குடியமரச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தையை மேற்கொள்வதன் மூலம் இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தாம் பொறுப் பேற்றிருப்பதாக அவர் கூறினார்.

ஒரு குறிப்பிட்ட காலவரைய றைக்குட்பட்டதாக சமாதானப் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்படும். நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் மற்றுமொரு யுத் தம் இந்த நாட்டில் இடம்பெறும் என்று தனது எதிரிகள் தெரிவிக்கும் குற்றச் சாட்டுகள் நியாயமற்றவை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-7)

## இராசி பலன்

3.11.2005

(ஐப்பசி 17, வியாழக்கிழமை)

பிரதமை முற்பகல் 7.07 மணி வரை

விசாகம் பிற்பகல்- 3.44 மணி வரை

இராகுகாலம்-1.34-3.04 மணிவரை

சுபநேரம்-7.34-9.04 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரயாண பயம், காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு, ரோகநிலை. |
| இடபம் | வாகன சுகம், முயற்சி கைகூடும், சௌக் கிய விருத்தி, செல்வாக்கு. |
| மிதுனம் | காரிய நன்மை, செய்தொழில் விருத்தி, நல்ல வருமானம், ஜனவசியம். |
| கடகம் | குடும்பநலம், சிறுவியாதி, தொழில் மந்த நிலை, முயற்சி தாமதம். |
| சிங்கம் | மனச் சோர்வு, எடுத்த காரியம் கைகூடும், மாதாசுகம், சுபசெலவு. |
| கன்னி | செய்தொழில் நன்மை, வாக்குமேன்மை, நல்ல முயற்சி, பொருள் சேர்க்கை. |
| துலாம் | வீண் வார்த்தை, தனவிரயம், அதிகாரம், காரியதாமதம். |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், முயற்சி கைகூடும், தொழில நன்மை, போசன்சுகம். |
| தனுசு | காரிய அலைச்சல், தனவிரயம், சயனசுகக் குறைவு, நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | பொருள் சேர்க்கை, பெருமையடைதல் நல்ல காரியம், உற்சாகம். |
| கும்பம் | தொழில் முன்னேற்றம், புதிய விடயம், மேன்மை, எடுத்தகாரியம் கைகூடும். |
| மீனம் | காரிய தாமதம், மனப்பதட்டம், பிரயாணம், கட்டுப்பாடு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

## சஷ்டியை நினைப்போம்



அறுமீன் பாலுண் அழகா போற்றி
தெய்வ யானையின் தேவா போற்றி
ஞான மூர்த்தியாம் நாதா போற்றி
மாவினைத் தடிந்த மன்னா போற்றி
செந்தில் வாழும் சேந்தா போற்றி

நான்முகன் போற்றும் நாதா போற்றி
ஊழ்வினை யகற்றும் உத்தமா போற்றி
வை மகிழும் ஐயா போற்றி
ஏரகப் பதிவாழ் இறைவா போற்றி
பாகீ ரதியின் பாலா போற்றி


சிங்கனை வதைத்த சிறுவா போற்றி
திருமால் மருகா தேவா போற்றி
பரம சிவனின் பாலா போற்றி
சேவற் கொடியுடைச் செல்வா போற்றி
பரசிவ குருவே பராபரா போற்றி

நன்றி: அண்ணா தொழிலகம்

(தொடரும்)

# தேசியம், தாயகம், தன்னாட்சி கோரிக்கைகளுக்கு தமிழரின் தேர்தல் புறக்கணிப்பு வலுச்சேர்க்கும்

## –தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம்



(சாவகச்சேரி)

**தேசியம், தாயகம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் சர்வதேசத்தின் அங்கீகாரத்தைக் கோரி மக்கள் எழுச்சிப் பேரணிகளை முன்னெடுக்கும் இன்றைய நிலையில் தமிழ் மக்களின் தேர்தல் புறக் கணிப்பானது அக்கோரிக்கைக்கு மேலும் வலுச்சேர்ப்பதாகவே அமையும். எனவே, தமிழ்மக்கள் அனைவரும் இத்தேர்தலைப் புறக்கணித்து இனத்தின் விடுதலைக்கு பலம் சேர்ப்பதே சரியான முடிவென்று தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் சுட் டிக்காட்டியுள்ளது.**

**இது விடயம் தொடர்பில் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையல்,**

எதிர்வரும் 17ஆம் திகதி நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல்



தொடர்பாக தமிழ்மக்களின் மன தில் இயல்பாகவே எழும் சில வினாக் களுக்கான தெளிவான விடைகளி லேயே அத்தேர்தல் தொடர்பான அவாகளின் அணுகுமுறை அமைய வேண்டும்.

இந்தத் தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களிக்க வேண்டுமா? வாக்களிப் பதனால் அவர்களுக்கு நன்மை உண்டா? வாக்களிப்பைப் புறக் கணிப்பதனால் நன்மை உண்டா? வாக்களிப்பதானால் யாருக்கு வாக்க ளிப்பது? பிரதான இருவரில் யாரா வது புரையோடிப்போன இனப்பிரச் சினைக்கு நியாயமான தர்வுகாணும் எண்ணத்தை உண்மையில் கொண டிருக்கிறார்களா?

இந்தத் தேர்தலில் பிரதான வேட் பாளர்களாகக் கருதப்படுபவர்கள் தற்போதைய பிரதமமந்திரி மஹிந்த ராஜபக்ஷ மற்றும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமிழ் மக்கள் தொடர் பாக இவ்விரு வேட்பாளர்களின் கடந்தகாலச் செயற்பாடுகள், தற் கால நிலைப்பாடுகள் என்பவற் றின் அடிப்படையில் இவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் எவ் வாறு அமையுமென நாம் மதிப்பீடு செய்துகொள்ள முடியும்.

### மஹிந்த ராஜபக்ஷ

மஹிந்த ராஜபக்ஷ வெளிப் படையாகவே இனவாதத்தைக் கக்கிவருவதுடன் தான் சிங்கள பௌத்த மக்களின் காவலன் என் றும் கூறிவருகிறார்.

அத்துடன், தமிழர்களின் உரி மைப் போராட்டத்தை நசுக்குவதற் கான மறைமுக நிகழ்ச்சிநிரல் ஒன றையும் கொண்டிருக்கிறார்.

தீவிர இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பவற்றுடன் இறுக்கமான ஒரு கூட்டை அவர் ஏற்படுத்தியிருப்பது டன் முழுக்க முழுக்க தமிழ்மக்க ளுக்கு எதிரான நிபந்தனைகளு க்கு இணங்கி உடன்படிக்கை செய்துள்ளதுடன் தனது தேர்தல் விஞ்ஞாபனமான மஹிந்தவின் சிந்தனையிலும் அதை வெளிப் படுத்தியுள்ளார்.

தமிழ்மக்களுக்குத் தாயகம் என்று ஒன்றில்லை. சுயநிர்ணய உரிமை கிடையாது. யுத்த நிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய் யப்படவேண்டும்; சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அனுசரணையாள ராகச் செயற்படும் நோர்வேயை புறந்தள்ள வேண்டும். ஒற்றையாட்சிக குள்ளேயே எந்தவொரு தீர்வும் காணப்படவேண்டும் என்பன ராஜ பக்ஷவின் எதிர்கால நடவடிககை கள் எவ்வாறு அமையும் என்பதை கட்டியம் கூறி நிற்கின்றன.

அதுமட்டுமன்றி, இவரும் இவ ரது கட்சியினரும் 'சமாதானத்திற் கான யுத்தத்'தை முன்னெடுத்து தமிழர் தாயகத்தைச் சிதைத்தவர் கள். பல்லாயிரக்கணக்கான தமி ழர்களின் உயிர்களைப் பறித்த வர்கள். ஆயிரமாயிரம் மக்களை அவர்களின் வாழ்விடங்களிலி ருந்து விரட்டி இன்றும் அகதிகளாக அலைய வைத்தவர்கள்.

தமிழர் தாயகப் பிரதேசங்க ளில் ஆக்கிரமிப்புச் சின்னங்களாக பன்சலகளையும், புத்தர் சிலை களையும் நிறுவி வருபவர்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கை, சமாதா னப் பேச்சுவார்த்தை என்பவற்றை கடுமையாக விமர்சிப்பதுடன், அதனை அடிப்படையாகக் கொண்டு ரணில் ஆட்சியைப் பறித்து சமாதா னப் பேச்சுவார்த்தையை முடக்கி யவர்கள்.

எனவே, மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பவற்றுடன் இணைந்து எதிர் காலத்தில் எவ்வாறு செயற்படுவார் என்பதை மேற்கூறிய விடயங்கள் எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

### ரணில் விக்கிரமசிங்க

ஐக்கிய தேசியக் கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க மஹிநத ராஜபக்ஷவைப் போல வெளிப் படையாக இனவாதம் பேசாவிட்டா லும், தமிழ் மக்களுக்குச் சார்பான வர் போல அவர் சில வார்த்தைக ளைக் கூறிவந்தாலும் ராஜபக் ஷவை விட மிக மோசமான தமிழ விரோதக் கொள்கைகளையும், மறைமுக வேலைத்திட்டங்களை யும் முன்னெடுத்து வரும் ஒருவர், இப்பொழுது அடக்கி வாசித்தாலும் மிகத் தீவிர இனவெறிகொண்ட ஐக கிய தேசியக் கட்சியின் தலைவர்.

1983இல் திட்டமிட்டு தமிழர் கள் மீது இனக்கலவரத்தை நடத் தியதுடன், தமிழர்களை அழிப்பதற் கான கொடூரமான யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்ட ஜே.ஆர்.ஜெய வர்த்தனாவின் ஆடசியில் முக்கிய அமைச்சராக இருந்து தமிழ மக் கள் மீதான சகல அராஜக நடவ டிக்கைகளுக்கும் துணைபோன கனவான்.

சந்திரிகா அரசினால் 2001 ஆம் ஆண்டு இனப்பிரச்சினையைத் தீர் க்க முன்வைக்கப்பட்ட அரைகுறைத தீர்வுத் திட்டத்தைக் கூட நாடாளுமன் றில் தனது கட்சி உறுப்பினர்களைக கொண்டு எரிப்பித்து குழப்பிய டித்த உததமன். யுத்த நிறுத்தம் செய்து தனது சிங்கள இனத்தை யும், நாட்டின் பொருளாதாரததை யும் காப்பாற்ற முனைந்தாரே யொழிய, பேச்சுவார்த்தையினூ டாக இனப்பிரசசினை தொடர்பாக எந்தவொரு முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாது, காலத்தை இழுத் தடித்து சர்வதேச வலைப்பின்னல் ஒன்றினூடாக தமிழர்களின் உரி மைப் போராட்டத்தை ஒடுக்க முனைநதவர்.

இந்தியாவுடனும், அமெரிக்கா வுடனும் பாதுகாப்பு உடன்படிக் கைகள் செய்யப் பகீரதப் பிரயத் தனம் செய்தவர். இன்றும் கூட இனப பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டத்தை தெளிவாக முன்வைக் காது ஒஸ்லோ பிரகடனம் என்றும, அதிகாரப் பரவலாக்கல் என்றும் ப,சிமெழுகி வரும் அதேவேளை, இராணுவத்தை நவீனமயப்படுத்து தல், ஸ்ரீலங்காவின் இறைமையைப பாதுகாத்தல் என்பவற்றில் உறுதி யான கருத்தை வெளிப்படுத்தி வருபவர்.

தமிழ் மக்களை ஒடுக்குவதற் கான அவசரகாலச் சட்டத்திற்கு ஒத் துழைத்து வருபவர். ரணில் விக் கிரமசிங்கவும் தமிழ்மக்களின் பிரச் சினை தொடர்பாக எவ்வாறு சொற் படுவார்? என்பதற்கு மேற்காட்டிய அவரது நடவடிக்கை தக்க சான்று பகிர்கின்றன.

உண்மையில், மஹிந்த ராஜ பக்ஷ, ரணில் இருவருமே பௌத்த சிங்கள மேலாதிக்கத்தின் காவ லர்கள். யார் சிறந்த காவலர் என பதை நிலைநாட்டவே போட்டி போடு கிறார்கள். இவர்கள் இருவரும் அர சியல் அதிகாரத்தைப் பிடிப்பதற் காக தமிழ்மக்களின் பிரச்சினையை பிரசார உபாயமாக வேறுபட்ட வகை யில் பயன்படுத்துகிறார்களேயொ ழிய, பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விருப்பமோ அல்லது தெளிவான, உறுதியான, ஒத்திசைவான எந்த வொரு கொள்கையோ, திட்டமோ இருவரிடமும் கிடையாது.

அதேவேளை, தமிழர்களையும், அவர்களது போராட்ட பலத்தை யும் ஒடுக்கவேண்டுமென்பதில் இரு வரும் ஒரே கொள்கையைக் கொண டுள்ளனர். தமது பிரச்சினைகளில் வேறுபட்டு நிற்கின்ற இருவரது கட்சிகளும் தமிழருக்கெதிரான அவசரகாலச் சட்டத்தை அமுலாக குவதில் ஒன்றிணைந்து செயற்படு வது நல்லதோர் எடுத்துக்காட்டு.

எனவே, இத்தேர்தலானது ஸ்ரீலங் காவுக்கும், சிங்களமக்களுக்கு மான ஒரு அதிகாரமிக்க தலை வரைத் தேர்தெடுப்பதற்கான ஒரு தேர்தலாகும். இத்தேர்தலில் வாக களிப்பதன் மூலம் தமிழ்மக்கள் எந் தப் பயனையும் அடையப்போவ தில்லை. ஆனால் இத்தேர்தலைத தமிழீமக்கள் புறக்கணிப்பதன் மூலம் பல நன்மைகளைப் பெறுவ தறகான வாய்ப்புக்கள் காணப்படு கின்றன.

தமிழ் மக்களின் அபிலாஷை களை எந்தவொரு சிங்களத் தலை வரும் நிறைவேற்ற மாட்டார்கள் என்பதையும் எவர் மீதும் தமிழ் மக் கள் நம்பிக்கையைக் கொண்டிரு க்கவில்லை. என்பதையும் இதன் மூலம் சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறமுடியும் எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. (ந-108)

## ரணில்- குஷ்னகன் சந்திப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியக் கண் காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன குஷ்னகன், எதிர்க்கட்சித் தலை வரும், ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட பாளருமான ரணில் விக்கிரமசிங் கவை கடந்த திங்கட்கிழமை சந்தி த்து தேர்தல் நிலைமைகள் தொடர் பாகக் கலந்துரையாடியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்திப்பு ஒருமணிநேரமாக இடம் பெற்றது.

எதிர்வரும் 17ஆம் திகதி நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல தொடர்பாக இருவரும் விரிவாகக் கலந்துரையாடியுள்ளதாக ஐரோப் பிய ஒன்றியம் விடுத்துள்ள செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ந-4)







காரைநகர் கிரர்மிய வைத்தியசாலையில் நோயாளர் விடுதி யொன்று அண்மையில் திறந்துவைககப்பட்டது. காரை இலண்டன் அபி விருத்திச் சபையினராலும், அமரர் இராசநாயகம் குடும்பத்தின ராலும் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிதி மூலம் அமைக்கப்பட்ட இக் கட்டடத் தொகுதியின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை முதலாவது படத்திலும், மூதறிஞர் கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்கள் திறந்து வைப்பதனை இரண்டாவது படத்திலும், இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கிய காரை நலன்புரிச் சங்க செயலாளர் அ.தில்லையம்பலவா ணர் உரையாற்றுவதையும், சமாதான நீதவான் க.சோமசேகரம் ஊர் காவற்றுறை பிரதேசச் சபையின் உப அலுவலக பொறுப்பதிகாரி சிவஞானம் ஆகியோர் அருகில் நிற்பதனை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: காரைநகர் செய்தியாளர்)

## கருத்துக் கணிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்பு வறுமை ஆராய்ச்சி நிலையத்தினர் யுத்தத்தாலும், வறு மையாலும் பாதிக்கப்பட்ட கிராமங்களாக கொழும்புத்துறை, திருநெல வேலி ஆகிய இடங்களைத் தெரிவு செயது அவற்றின் குறைநிறைகளை 10பேர் கொண்ட குழுவினர் மூலம் ஆராய்ந்தனர்.

கடந்த வியாழக்கிழமை காலை 10 மணிக்கு செபமாலை அன்னை போட்டிக்கோ மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண டவர்கள் இது தொடர்பாகத் தங்கள் கருத்துக்களையும், தொழில் கல்விக்கு இடையூறாக இருப்பனவற்றையும் விளக்கிக் கூறினார்கள்.

வறுமை ஆராய்ச்சிமையமானது திருகோணமலை, அம்பாறை, மட் டக்களப்பு உட்பட நாட்டின் பல பாகஙகளிலும் கருத்துக் கணிப்பை நடாத்தி வருவதாக மேற்படி நிறுவத்தினர் தெரிவித்துள்ளனர். (து-51)

## பயிற்சி வகுப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லின் போது தென்மராட்சியில் கட மையில் ஈடுபடவிருக்கும் எழுது வினைஞர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று எதிர்வரும் 6ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

காலை 10.00 மணிக்கும், மாலை 2.00 மணிக்கும் இப் பயிற்சி இடம் பெறும். இதில் சகல எழுதுவினைஞர் களையும் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலக நிர் வாக உத்தியோகத்தர் கேட்டுள ளார். (ந-108)

# இன்று ஒரு தகவல்

## பிரம்மம்

'பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான் என்று ஒரு பெரியவர் ஒரு கோவிலில் பேசினார். தைத்ரீய உபநிடதம் அப்படிக் கூறுகிறதாம்.இதைக் கேட்கும் பொழுது நமக்கு ஒரு சந்தேகம் வரும்.அது எப்படி? பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான் என்றால் சிங்கத்தை அறிந்தவன் சிங்கம் ஆகிறானா? தோசையை அறிந்தவன் தோசை ஆகின்றானா? இப்படிப்பட்ட சந்தேகம் நமக்கு வருவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை! இது இயற்கை! இதற்கும் அந்தப் பெரியவரே பதில் சொல்கிறார்.

சிங்கம் வேறு நாம் வேறு. அதனால் சிங்கத்தை அறிந்தவன் சிங்கமாக மாட்டான். ஆனால் பிரம்மம் வேறு நாம் வேறு அல்ல அதனால் பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான் என்பது அவருடைய விளக்கம். மனிதன் தான்தான் பிரம்மம் என்று தெரியாததனால் அதை வேறு எங்கேயோ தேடிக்கொண்டிருக்கிறான். கடைசியில் அதுதான் தானென்பதைப் புரிந்துகொள்ளும்போது அவன் பிரம்மம் ஆகிவிடுகிறான். இதை விளக்குவதற்கு ஒரு உபநிடத்தில் ஒரு கதை இருக்கிறது. நமக்குத் தெரிந்த கதைதான். ஆனால் அதை வேறு அர்த்தத்தில் விளையாட்டாகக் கூறிக்கொண்டிருக்கிறோம்.

ஒருமுறை பத்து நண்பர்கள் காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள். குறுக்கே ஒரு நதி அதைக் கடந்து அடுத்த பக்கம் போக வேண்டும். எல்லோரும் ஒரு வழியாக அதைக் கடந்து அடுத்த கரைக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். அங்கே போய்ச் சேர்ந்த பின்பு எல்லோரும் பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டோமா என்று தெரிந்து கொள்வதற்காக அந்தக் கூட்டத்துத் தலைவன் எல்லோரையும் எண்ணிப் பார்க்கிறான்.

அவர்கள் மொத்தம் 10 பேர். ஆனால் இவன் எண்ணிப் பார்க்கும்போது 9தான் வருகிறது. ஏனென்றால் அவன் தன்னை விட்டு விட்டுத்தான் எண்ணினான். ஐயையோ! பத்தாவது ஆள் எங்கே? என்று பதறுகிறான்.''சரி நீ இரு நான் எண்ணுகிறேன்'' என்று கூறிவிட்டு இன்னொருவன் வந்து எண்ணினான். அவனும் தன்னை விட்டுவிட்டு எண்ணினான் 9 தான் வந்தது. எல்லோரும் குய்யோ முறையோ என்று கத்த ஆரம்பித்துவிட்டார்கள். அந்த சமயத்தில் ஒரு பெரியவர் அந்தப் பக்கமாக வருகிறார். 'என்ன விஷயம்?' என்று விசாரித்தார். பத்தாவது ஆளை ஆறு அடித்துக்கொண்டு போய்விட்டது என்று கூறி இவர்கள் அழுதார்கள். சரி அழாதீர்கள் என்று கூறி அந்தத் தலைவனைப் பார்த்து இப்படி வா என்கிறார்.வந்தான் இப்போது எனக்கு முன்பு நின்று ஒருமுறை எண்ணு என்றார். ஒன்றில் ஆரம்பித்து 9இல் வந்து முடிகிறான். உடனே பெரியவர் ''நீ தான் அந்த 10வது ஆள்'' என்கிறார் இது உண்மை.

ஆம்! நாம்தான் அது! நாம்தான் நம்மை வேறு எங்கேயோ தேடிக் கொண்டிருக்கிறோம். நாம் எங்கேயோ தேடிக் கொண்டிருக்கிறோமே அந்தப் பிரம்மம் நாம்தான். இப்படி ஒரு பெரிய உண்மையை விளக்குவதற்காகத் தான் அப்படி ஒருகதை கூறப்பட்டது. ஆனால் அதை நாம் வேறு விதமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். எப்படித் தெரியுமா?.

ஒரு ஆற்றங்கரையில் 10 பேர் முழித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார்களாம். அந்தப் பக்கமாக வந்த ஒருவன் ''ஏன் இப்படி முழித்துக்கொண்டு நிற்கிறீர்கள்?'' என்று கேட்டான். எங்களுக்கு நீச்சல் தெரியாது. நாங்கள் எல்லோரும் அடுத்த கரைக்குப் போய்ச் சேரவேண்டும் என்றார்கள். சரி நான் கொண்டு போய் விடுகிறேன் எல்லோரும் அக்கரைக்குப் போய்ச் சேர்ந்ததுடன் ஆளுக்கு ஒரு ரூபா வீதம் மொத்தம் 10 ரூபா கொடுக்கவேண்டும் என்றான். சரி என்று ஒத்துக்கொண்டார்கள்.

இவன் ஒவ்வொருவராக கையைப் பிடித்து மெதுவாக ஆற்றில் இறக்கி அழைத்துக்கொண்டு போனான். 9 பேரைக் கரைசேர்த்துவிட்டான். பத்தாவது ஆள் பாதி ஆற்றில் போய்க்கொண்டிருந்த போது திடீரென்று வெள்ளம் வந்துவிட்டது. பிடி நழுவிவிட்டது. கையை விட்டுவிட்டான். வெள்ளம் அடித்துக்கொண்டுபோய் விட்டது. அழைத்துக்கொண்டு வந்தவன் நீச்சலடித்துத் தட்டுத் தடுமாறி கரைக்கு வந்து சேர்ந்துவிட்டான்.

கரையில் இருந்தவர்களுக்கு இந்த விஷயம் தெரியாது. இருந்தாலும் இவனது உடல் முழுவதும் நனைந்து கொஞ்சம் அதிகமாகவே மூச்சுவாங்க நின்று கொண்டிருந்தான். ''ஏன் இப்படி மூச்சு வாங்குகிறது? என்ன விஷயம்?'' என்று கேட்டார்களாம். அதற்கு இவன் கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் வேறு ஒன்றும் இல்லை நீங்கள் கொடுக்க வேண்டிய பத்து ரூபாயில் ஒரு ரூபா குறைந்துவிட்டது அவ்வளவுதான் என்றானாம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேர்தலுக்கு முன்னர் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படின் ஐ.தே.க அதனைப் புறக்கணிக்கும் - திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டின் தேசிய வரவு செலவுத் திட்டத்தை அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முயற்சிசெய்து வருவதாக ஐக்கிய தேசியக கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்க அவ் ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டின் தலைவரைத் தெரிவு செய்யும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு 13 நாட்கள் இருக்கும் வேளையில் வரவு செலவுத் திட்டமொன்றை சமர்ப்பிப்பது சம்பிரதாயத்துக்கு முரணானது.

வரவு செலவுத்திட்டம் இவ்வாறு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமானால் ஐக்கிய தேசியக் கட்சி அதனைப் புறக்கணிக்கும். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் 17ஆம் திகதிக்கு முன்பாக வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்வதால் மஹிந்தவிற்கு அது பயன்படும் என்ற கருத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாகவுள்ளது.

வரவு செலவுத் திட்டம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த கருத்துக்களை நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தன்னிடம் கூறியதாக ஜனாதிபதி எமக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இந்த நிலையில், நவம்பர் மாதம் 8ஆம் திகதி மேற்கொள்ள வேண்டிய செயற்திட்டம் தொடர்பாக எமது கட்சி முடிவினை எடுக்கும்.

வரவு செலவுத் திட்டத்தை புறக்கணிக்கும் உத்தியோகபூர்வ அறிவிப்பை எமது கட்சி வெளியிடா விட்டாலும் மலையகக் கட்சிகள் முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிப்பதைப் புறக்கணிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார். (ற-8)

# சுனாமி நிவாரணங்களை விநியோகிக்காத அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி நிவாரண உதவிகளை விநியோகிக்காமல் இருக்கும் அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நிவாரண புனர்வாழ்வு மீள் கட்டமைப்பு பிரதியமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியாலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுனாமி நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டபோதும் சில இடங்களில் நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கப்படாத சம்பவங்களும், அவை தீ விபத்தினால் எரிந்து சாம்பலான சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

சமூக சேவை அமைச்சின் களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்களுக்கே இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இச் சம்பவங்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# வாய்ச் சுகாதார தினமாக நவம்பர் 5 பிரகடனம்

எதிர்வரும் 5ஆம் திகதியை தேசிய வாய்ச் சுகாதார தினமாக பிரகடனப்படுத்தி விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சு சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் வைத்திய சாலை பற் சிகிச்சை நிலையங்கள், பாடசாலை பற் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் பல சிறுவர்களில் பல்,முரசு வியாதிகள் அதிகளவு காணப்படுவதாகவும் இது தொடர்பான விழிப்புணர்வு சுகாதாரக் கருத்தரங்குகளை பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி சிறார்கள் மற்றும் பெற்றோர்களிற்கு ஊட்டுவதன்மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான நோய்கள் பரவும் வீதத்தை இயன்றளவு குறைக்க முடியும்.

பிள்ளைகளிடம் சரியான முறையில் பல் துலக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல், மூன்று வேளை உணவருந்தியதன் பின்னரும் பல் துலக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதுடன்,இனிப்பு வகைகளை இயன்றளவு உண்பதைத் தடுத்தல் போன்றவற்றை ஏற்படுத்துவதும் மிகவும் அவசியம்.

அத்துடன் பாடசாலைகளில் ஆசிரியர்களும், வீடுகளில் பெற்றோர்களும் பிள்ளைகளின் பல்லை அவதானித்து பற்காவி,பற்சூத்தை,பல்,முரசு வியாதிகள் என்பன ஏற்பட்டுள்ளதாவென அவதானிக்க வேண்டும். பல்லில் அல்லது முரசுகளில் ஆரம்பத்தில் நோய் இனம் கண்டவுடன் பல் வைத்தியரிடம் சென்று விரைவான சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மற்றைய பகுதிகளுக்கு நோய் பரவுவதைத் தவிர்க்கமுடியும்.

மேலும் இதுதொடர்பான மேலதிக விபரங்களைப் பாடசாலை பற் சிகிச்சையாளர்கள்,பல் வைத்திய அதிகாரிகள்,பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-252)

# தென்மாகாண முதலமைச்சர் ஐ.தே.கட்சியுடன் இணைவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தென்மாகாண சபையின் முதலமைச்சர் அஜீத் ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க,அஜீத் ராஜபக்ஷ கட்சியில் இணைந்து கொண்டமைக்கான உறுப்புரிமையை வழங்கினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு திகதி அறிவிக்கப்பட்ட பின் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

# சமநிலைப் பொருளாதார முறை தற்போது நடைமுறையில் இல்லை

## நிதியமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சமநிலைப் பொருளாதார முறை உலகில் தற்போது செயற்படவில்லையென நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

வெளிப்படையாக முன்னர் நடைமுறையிலிருந்த பொருளாதார முறை மூலமே நாட்டை அபிவிருத்தி செய்யமுடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கரிஸ் பத்துவ அலவத்துக் கொடப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்ட கொள்கைகள் ஒரு நாட்டின் கொள்கைகளாக இருக்கவேண்டும்.

பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களை வங்கியின் உதவியுடன் நியாயமான முறையில் பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று சுட்டிக்காட்டினார். (ற-9)

# ஆயுத முனையில் ரூ.30 இலட்சம் கொள்ளை; சந்தேக நபர்கள் கைது; பணமும் மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற 30 இலட்சம் ரூபா கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டுளளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் திஸ்ஸ மாரகம, ஹபராதுவப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களிடம் இருந்து ரூ.25 இலட்சத்துக்கும் மேற்பட்ட பண நோட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ள அதேவேளை, கொள்ளைச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-8)

# உள்ளத்தால் உயர்ந்தோருக்கு எக்காலத்துக்கும் அச்சம் இல்லை

வள்ளுவன் கண்ட அறிவுடைமை வர்னத்தையும் விட உயர்ந்து நிற்கின்றது. ஆம் அவன் தீர்க்க தரிசனத்தோடு சிந்தித்த ஆகக சிந்தனை அறிவுடையார் சிந்தனையுள் அஞ்சுதற்கு அஞ்சுதலையும் அஞ்சாமைக்கு ,அஞ்சாமையையும் எடுத் துக்காட்டி அஞ்சாமைக்கும் அறிவுடமைக்கும் பெருமை சேர்த்து நிற்கிறது. இக் கருத்தை இந்த ஆக்க சிந்தனையுள் எழுந்த அஞ்சாமை எனும் அறிவுடமையை வள்ளுவன் இவ்வாறு வைக்கின்றான்.

**"அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவுடையார் தொழில"**

இன்றைய சமுதாய நீரோட்டத்தில் கலந்துவிட்ட நாம், அறிவுப் புலத்தை ஆழப்பயன்படுத்த வேண்டிய் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். "அன்பின் வழியது உயிர் நிலை எனபது போல அறிவின் வழியும் அஞ்சாமை என்பதே வள்ளுவன் கண்ட அறிவுடைமைக் கண்ணோட்டம். அதுவே அறிவுடையார் தொழில். புல் அறிவு என்பது இழிந்த அறிவும், குறைந்த அறிவு மாகும. இந் நிலையுடையார் ஒரு போதும் அஞ்சுவதற்கு அஞ்சார். இவர்கள் சிற்றினத்தைச் சேர்ந்தவர்கள என்பது ஆன்றோர் கருத்து. அஞ்சுவதும் அஞ்சாமையும் அரசியலில் அரசனுக்கு மட்டும் சிறப்பாகப் பொருந்துவது அன்று. பொது நிலையில் பொது மக்களிற்கும் பொருந்தவே வள்ளுவன் வைத்துள்ளான்.

அஞ்சல் என்பது தனி மனிதனுக்கு மடடுமா? அல்ல. உன் குடும்பத்துக்கு மட்டுமா? அல்ல. சமூகத்திறகு மட்டுமா? அல்ல. தேசத்திற்கு மட்டுமா? அல்ல. அது உலகில் வாழுகின்ற எல்லோருக்கும் எந்த இடத்திலும் பொருந்தும் ஒன்றாகும். பாய்ந்துவரும் புலியை முறம் கொண்டு தாக்கினாள ஒரு தமிழ்ப் பெண் என்று தமிழ்ப் பெண்ணின் அஞ்சாமை ஆகிய வீரத்தை புறநாநூறு கூறுகிறது. "போருக்குப் புறப்படடா மகனே எதிரியைப் பந்தாடிவா மகனே" என்று அந்தச் சின்னஞ் சிறு சிறுவனுக்கு வாளும வேலும் கொடுத்து போருக்கு அனுப்பினாளே ஒரு வீரத்தாய். அங்கே அஞ்சாமை உயிர்ப்போடு ஓங்கி நிற்கிறது. இவற்றையெல்லாம் விதந்து உயர்ந்து நிற்கின்றாள் மற்றொரு வீரத்தாய்.

**"கருவினில் வளரும் மழலையின் உயிருக்கு**
**தைரியம் வளர்த்தாள் தமிழ் அன்னை"**

என்று கவியொன்று கூறி நிற்கின்றது. இங்கே சங்கத் தமிழ் கண்ட புற நாநூற்றுத் தாய்மார்களின் வீரத்தைக் கண்டோம். இது அஞ்சாமையால்-அஞ்சாமை உணர்வினால் உண்டான சிறந்த விழுமிய மாகும்.

"பரணிக்கோர் ஜெயம் கொண்டார்" என்று இலக்கிய ஆர்வலர்களால் போற்றப்படுகின்ற ஜெயம் கொண்டார் பாட்டுடைத் தலைவனாம் குலோத்துங்க சோழன் கலிங்கத்தின் மீது படையெடுத்தான். பிணமலை குவிந்தது. இரத்த ஆறு ஓடிற்று என்று பாடியதிலிருந்து குலோத்துங்கனின் வீரம் அஞ்சாமையால் உயர்ந்து நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

தமிழன் வரலாற்றில் கறைபடிந்து போனவர்களான எட்டப்பன், காக்கை வன்னியன் போன்றோர்கள் பேராசையும் நப்பாசையும் கொண்ட இனத் துரோகிகள்-சமூகத் துரோகிகள். "துணிந்தவனுக்குத் தூக்கு மேடை பஞ்சு மெத்தை" என்றான் வீரபாண்டிய கட்டப் பொம்மன். இங்கே அஞ்சல் என்ற விழுமியப் பண்பினால் விளைந்ததே இவ் வீரம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயனுக்குப் பாரத தேசம் அடிமைப்பட்டுக் கிடந்தது. பாரத மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமைகள் ஆக்கப்பட்டார்கள். அஞ்சாமை என்னும் விழுமியப் பண்பை இழந்து தினமும் அஞ்சி அஞ்சிச் செத்தார்கள். ஆங்கிலேயரின் அடக்குமுறையை முறியடிக்க இவர்களால் முடியவில்லை. அச்சம் என்ற மடைமை இவர்களைக் காவு கொண்டுவிட்டது. இந்த நிலமையில் 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே' என்று மார்தட்டிய புரட்சிக் கவிபாரதி, பாரதமக்களின் அஞ்சு தலைப் பார்த்து இப்படி வைக்கின்றான் கவிதையை.

**"அஞ்சி அஞ்சிச் சாவார் அவர்**
**அஞ்சாத பொருளிலை அவனியலே**
**துஞ்சுது முகட்டிலென்பார் மிகத்**
**துயர்ப்படுவார் பயப்படுவார"**

மூடக்கொள்கையில் முகிழ்ந்த ஒன்றாக இந்த அஞ்சுதல் சின்னஞ் சிறு குழந்தைகளின் உள்ளத்தில் விதைக்கப்படுவதைக் காண்கின்றோம். 'அது வேப்பமர உச்சியில் நின்று பேயொன்று ஆடுது என்று விளையாடப் போகும் போது சொல்லி வைப்பாங்க. உந்தன் வீரத்தை முளையிலே கிள்ளி வைப்பாங்க' என்று கவிஞர் பட்டுக்கோட்டையார் அன்று பாடிவைத்தார். இத்தகைய மூடக்கொள்கையால் குழந்தைகளின் உள்ளம் பெரிதும் அஞ்சப்பட்டு அச்சத்தால் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடப்பது நியாயமா? வளரும் குழந்தைகள் வளரும் சமுதாயம் எதிர்காலத் தூண்கள் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்ற குழந்தைகள் வீரதீரம் மிக்கவர்களாக, அஞ்சாத நெஞ்சம் உடையவர்களாக வளர்க்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் அவர்கள் ஆளுமைப் பண்பை, தலைமைத்துவப் பண்பை உடையவர்களாக வளரவேண்டும்.

இருபதாம் நூற்றாண்டில் சிறந்த புரட்சிக் கவிஞனாக மிளிர்ந்த பாரதி அஞ்சா நெஞ்சம் கொண்டு ஆங்கிலேயரின் அடக்கு முறையை உடைத்தெறிய முனைந்தான். பல விடுதலைக் கவிகளைப் பாடிக் குவித்தான்.

போர் நிலையிலும் சரி, கல்வி நிலையிலும் சரி, அரசியல் நிலையிலும் சரி, அவை நிலையிலும் சரி, வேறெந்த நிலையிலும் சரி, எந்த இடத்திலும் சரி ஒருவன் அஞ்சல் என்ற விழுமியப் பண்பை கடைப் பிடிததல் அவசியமாகின்றது. இவற றுக்கெல்லாம் அஞ்சுபவன் செத்தவனே உயிரோடு நடமாடும் நடைப் பிணமே.

"கற்றவர் சபையில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும்" இது கற்றவருக்குச் சிறப்பு. கற்றவற்றைக் கற்றவர் அவையில் கவின் உறப்போவது அஞ்சாமையின் சிறப்பு. எவன் ஒருவன் கற்றவர் அவையில் அஞ்சாது நின்று சொற் சோர்வுபடாமல் பேசுகின்றானோ அவனே அஞ்சல் என்ற விழுமியப் பண்புக்கு உரியவன். கற்றவர் அவையில் பேசுவதற்கு அஞ்சுபவன்-ஒதுங்குபவன் கற்றிருந்தும் கல்லானே ஆவான். கடைப் பட்டவன் ஆவான். எந்த இடத்திலும் எதையும் சொல்ல வல்லானே சிறந்தவன் கல்விமான்.

இன்றைய அரசியல் வரலாற்றில் இது ஒரு கண்ணோட்டம். இன்றைய அரசியல் நீரோட்டத்தில் கலநதுவிட்ட சிலர் அச்சம் கொண்டு கோழைகளாய் பேடிகளாய் ஓடி மறைகின்றார்களே ஏன்? அவர்களிடத்தே அச்சம் குடிகொண்டுள்ளது. மானத்தை இழந்து உயிரைப் பெரிதாக மதிக்கின்றவர்களே அஞ்சுகின்றார்கள். இது எல்லோர்க்கும் எல்லா இடத்திலும் பொருந்துவதன்று.

எந்த மதத்திற்கும் எந்த இனத்தாருக்கும் எந்த மொழியாருக்கும் எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் திருக்குறள் பொருந்துவது போல அஞ்சல் என்பதும் எந்த மதத்திற்கும் எந்த இனத்திற்கும்

**K.தவச்செல்வி**

எந்த மொழியாருக்கும், எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் பொருந்தும் ஒரு பண்பாகும்.

பஞ்சமா பாதகங்களிற்கு அஞ்சு. அநீதிகளிற்கு அஞ்சாதே. அன்புக்கு அஞ்சு வன்புக்கு அஞ்சாதே, உள்ளத்தால் உயர்ந்து உண்மை வழி நடக்கின்ற பொய்யாமொழி மாந்தர்க்கு அஞ்சல் இல்லை. இதனை எல்லோரும் எந்த இடத்திலும் பொருந்துமாறு கடைப்பிடித்தால் அவர்தம் வாழ்வு

**"வெள்ளத்து அனைய மலர் நீட்டம் மாந்தர் தம்**
**உள்ளத்து அனைய உயா"**
என்று பாடி நிற்க நம் மாங்குடி மருதனாா அவர்களோ குறளின் பெருமையைப் பின்வருமாறு பாராட்டியிருக்கிறார்.

**ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி**
**வேதப் பொருளாய் மிகவிளங்கிச் - தீதற்றோர்**
**உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே**
**வள்ளுவர் வாய்மொழி மாண்பு**

## கே.எம்.முன்சி மொழிந்தவை

வட இந்திய அறிஞர்களுள் நடுநிலையோடு நல்ல கருத்துக்களை வழங்கியவர் கே.எம்.முன்சி அவர்கள். அவர் திருககுறளைப் பற்றி கூறியுள்ள பின்வரும் கருததுக்கள் எமக்குப் பெருமிதத்தையும் பேருவகையையும் தருகிறது.

'சாரத்தில் திருக்குறள் வாழ்வியல் பற்றி ஒரு தன்னேரில்லாத அறநெறி நூல். நூலாசிரியர் திருவள்ளுவர், ஆழ்ந்த கூர்மதி, முழுமையான தேர்ச்சித் திறம், நிறைவான நுண்திறம் ஆகியவற்றுடன் மனித இயல்பின் நுட்பங்களை ஊடுருவி ஆராய்ந்தறிகிறார். இக்கால உளவியல கோட்பாடுகளைக் கூட அவர் மிக நுட்பமாக தன்மயமாக்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய அறிவாற்றலின் ஆழமும் அகலமும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. கடவுள தன்மை தோய்ந்த அவருடைய நெறிமுறைகளும், அறவியலும், நீதிமுறைமையும், மனிதநேயமும், மட்டற்ற மதி நலமும், சீரிய செயலாற்றலும் வாய்ந்தவை. அவை சாதி சமயப் பாகுபாடுகளை யும் காலத்தையும் கடந்தவை. அவை தற் காலத்திற்காக எழுதப்பட்டன போன்ற புதுமை மணம் கமழ்கின்றன.

## ஈழத்தமிழருக்கு வழிகாட்டும் குறள்

வள்ளுவரின் முப்பாலாகிய அறத்துப் பாலையும், பொருட்பாலையும், காமத்துப் பாலையும் நாம் படித்துப் பயன்பெறவேண்டும் என்பதில் எம்மிடையே கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் இன்றைய சூழ்நிலையில் வள்ளுவர் தந்த முப்பாலினுள் பொருட்பாலில் நாம் கூடிய கவனம் செலுத்தவேண்டிய நிலையில் உள்ளோம். அறத்துப்பாலில் 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நனயம செய்து விடல்' என்று எதிரியும நாணுகின்ற முறையில் தீமை விளைவித்த எதிரிக்கு நன்மை செய்யவேண்டும் என்று கூறுகின்ற வள்ளுவர், பொருட்பாலில் கயமை அதிகாரத்தில் 'சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல் கொல்லப் பயன்படும கீழ்' என்று சொல்லித் திருத்த முடியாதவர்களைக கரும்பைப் பிழிந்து சாறு எடுப்பதுபோல இவர்களை நெருக்கடிக்கு ஆளாக்கித்தான் பயன்பெற முடியும் என்று கூறும் வள்ளுவர் கருத்து இன்று நாம் ஆழந்து சிந்திக்க வேண்டிய கருத்தாகும். எம் சமுதாயத்தில் சொல்லித்திருத்த முடியாத கயவருடைய எணணிக்கை கொஞ்சம் கூடியதாக இருகிறது. அவர்களைப் பிழிந்தெடுத்துத்தான பயன்பெறமுடியும் என்பது வள்ளுவர் கருத தாகும். வள்ளுவர் நெல் வேண்டும் என்றால் களை பிடுங்கப்படுவது போல் எம் சமுதாயததில் உள்ள புல்லர் கூட்டம் - கயவர் கூட்டம் களைந்தெறியப்பட வேண்டும் என்று ஆழந்த சிந்தனையின் அடிப்படையல் கூறும் கருத்து எம அறிவுக் கண்ணைத் திறக்க உதவட்டும்.

இதே வள்ளுவர் தனது 'குடிசெயல் வகை' என்ற அதிகாரத்தில் தாம் பிறந்துள்ள குடியை உயர்த்த ஒருவன் உண்மையாக உழைபபானாயின் தெய்வம் மடிதட்டி அவனுக்கு உதவ முன்வரும் என்ற கருத்தை நாம் பிறநதுள்ள தமிழினத்தைக் காக்க நாம் உண்மையில் முயற்சியெடுப்போமாயின் தெய்வம மெக்குத் துணை நிற்பது உறுதி என்று கூறுகிறார்.

எனவே வள்ளுவன் தந்த திருக்குறள்

**மா.க.ஈழவேந்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**

உலகப் புகழ் ஈட்டியிருப்பது ஒருபுறம் இருக்க ஈழத்தமிழினத்தை உய்விக்கின்ற குறளாகவும் விளங்குகின்றதென்பதை நாம் உய்த்து உணர்வோமாக.

## அறிஞர் அண்ணா மொழந்தவை

குறள் பற்றி அறிஞர் அண்ணா மொழிந்தவை எமக்கும் பொருநது கூற்றாகும். அறிஞர் அண்ணா அரசப் பேருந்துகளில் குறளைப் பொறிக்குமாறு கட்டளையிட்டிருந்தார். ஆனால அறிஞர் அண்ணாவைக் கேலி செய்கின்ற முறையில் தமிழ் நாட்டு சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவர் இந்தக் குறட்பாக்கள் யாருக்கு நல்லொழுக்கத்தைப் போதிப்பதற்காக பேருந்துகளில் பொறிக்கப்பட்டுள்ளன? பேருந்து ஊழியர்களுக்காகவா அல்லது பேருந்தில் பயணம் செய்பவர்களுககாகவா என்று கேலியாகக் கேட்டபோது 'கண்ணுள்ளோர் பார்ப்பதற்காக' என்று அறிஞர் அண்ணா பதிலடி கொடுத்தார். ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை கண்ணுள்ள ஈழத்தமிழர் அனைவரும் முறையாக குறளைப பயன்படுத்துவோமாயின் தமிழீழம் எம்மை நாடி வருவது உறுதி. இதனை உலகில எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. (அ)

# போதைப்பொருள் கடத்தலை தடுக்க இந்தியா- இலங்கை கூட்டு நடவடிக்கை

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து மன்னாரினூடாக மேற்கொள்ளப்படும் போதைப்பொருள கடததல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தியப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவும், இலங்கைப் பொலிஸாரின் போதைபபொருள் தடுப்புப் பிரிவும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இந்தியர்கள்; ஹெரோயினுடன் மன்னார் பிரதேசத்தில் கைதுசெய்யப்படுவது அதிகரித்துள்ளதையடுத்தே இத்தகைய கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கைப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் இயக்குநர் ஆனந்த ஹெடடியாரச்சி தெரிவித்துள்ளார்.

சுமார் 6கோடி ரூபா பெறுமதியான 12கிலோவுக்கு அதிகமான ஹெரோயினுடன் இந்தியர்கள் இருவர் கடந்த மாதம் 27ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பிலான விசாரணைகளையும் இந்தியத்தரப்பினருடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளதாக ஆனந்த ஹெட்டியாரச்சி மேலும் தெரிவித்தார்.

ஒக்டோபர் மாதத்தில் மட்டும் மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 23 கிலோ ஹெரோயின் கண்டுபிடிககப்பட்டுள்ளது.

இவற்றில் 14 கிலோ ஹெரோயின் இந்திய நாட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# வெளிநாட்டில் பட்டப்படிப்புக்கு புலமைப் பரிசில்

சீனா, இந்தியா, ரஷ்யா, பங்களாதேஷ், பாகிஸ்தான், ஈராக், கியூபா, துருக்கி போன்ற நாடுகளில் 2006ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பட்டப்படிப்பு புலமைப்பரிசில்களுக்கு தகைமை பெற்றிருககும் இலங்கை மாணவர்களிடமிருந்து கல்வி அமைச்சின் உயர்கல்விப் பிரிவு விண்ணப்பம் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் அனைவரும் பின்வரும் பொதுத்தகைமைகளை கொண்டிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன் விண்ணப்பிககும் துறை தொடர்பான பாடங்களில் இலங்கை பரீடசைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படட க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

ஆங்கில மொழி தொடர்பாக சிறந்த அறிவைப பெற்றிருப்பதுடன், விண்ணப்பதாரி அரசாங்க, அலலது அரசாங்க உதவிபெறும் துறைகளில் ஊழியராக இல்லாதிருத்தல், மேலும் விண்ணப்பதாரி தற்போது இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் கற்கைநெறி ஒன்றிற்குத் தெரிவு செய்யப்பட்டவராகவோ அல்லது கறறுக்கொண்டிருப்பவராகவோ இருத்தல கூடாது.

விண்ணப்பங்கள் யாவும் 25.11.2005 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இவ்விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களை ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி வெளியான அரச வர்த்தமானப் பத்திரிகையில பார்வையிடமுடியும். (அ-19)

# 'அல் - கெய்டா' முகாம்கள் மீது அமெ.விமானங்கள் குண்டுவீச்சு

## 40 பேர் பலி; 60 பேர் படுகாயம்

(பக்தாத்)

சிரியா எல்லையை ஒட்டியுள்ள காயிம், கராபில்லா ஆகிய கிராமங்கள் மீது நேற்று முன்தினம் அமெரிக்க ஜெட் விமானங்கள் சரமாரி குண்டுவீசி தாக்குதல் நடத்தின. தரைப்படையும் இந்த கிராமங்களை சுற்றி வளைத்தது.

இந்த அதிரடித் தாக்குதலில் 40 பேர் பலியானதுடன், 60க்கும் மேற்பட்டவர்கள்படு காயம் அமைந்துள்ளனர். 400க்கும் மேற் பட்ட தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களது முகாம்களும் தகர்க்கப்பட்டன.

ஈராக்கில் மறுசீரமைப்பு பணிகளில் ஈடு பட்டுவரும் அமெரிக்க படைகள் மீது சதாம் உசேன் ஆதரவு தீவிரவாதிகள் தொடர்ந்து கார் குண்டு தாக்குதல் நடத்தி வருகிறார் கள். இதுவரை 2,200 அமெரிக்க வீரர்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு பலியாகி உள்ளனர்.

பின்லேடனின் அல்-கெய்டா இயக்கமும் இந்த தீவிர வாதிகளுக்குஉதவி செய்து வந்தது. சிரியா எல்லையை ஒட்டியுள்ள பகு திகளில அல்-கெய்டா தீவிரவாதிகள் முகாம் அமைத்து அங்கு ஈராக் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ற)



ஈராக்கின் பாஸ்ரா நகரில் கார் குண்டு வெடித்ததில் 20 பேர் கொல்லப்பட்டனர். குண்டு வெடித்த வாகனத்தை போலீஸ் அதிகாரிகள் ஆய்வு செய்கின்றனர்

# காஷ்மீர் முதலமைச்சரின் வீட்டருகே தீவிரவாதிகள் கார்க்குண்டுத்தாக்குதல்

காஷ்மீர் முதலமைச்சர் வீட்டருகே இடம் பெற்ற கார்க்குண்டுத்தாக்குதலில் 6பேர் பலியாகினர்.

காஷ்மீர் முதலமைச்சரின் பதவியேற்பு விழா பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று மாலை ஷெர்–இ–காஷ்மீர் சர்வதேச மாநாட்டு மைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிலையில் புதிய அமைச்சரவை பதவி யேற்பு விழாவை அதிரவைக்கும் வகை யில் தீவிரவாதிகள் திடீர்த்தாக்குதலை நடத் தினர். 100கிலோ வெடிகுண்டுகளை காரில் ஏற்ற வந்த தற்கொலைப்படைத் தீவிரவாதி யால் இவ்வதிரடித்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

அந்த தீவிரவாதி பச்சைநிற மாருதிக்கா ரில் வேகமாக வந்தான். காலை 10 .30 மணிக்கு அந்தக்கார் மத்திய காஷ்மீரில் உள்ள நவ்ஹம் சவுக் ஏரியாவிற்கு வந்த போது சோதனைக்காக பாதுகாப்பு படையி னர் அந்தக்காரை நிறுத்துமாறு சைகை காட் டினர். ஆனால் கார் நிற்கவில்லை. மின்னல் வேகத்தில் சென்றது.

இதனால் சந்தேகமடைந்த பாதுகாப்பு படையினர் அந்தக்காரைத் துரத்தினார்கள். சிறிது நேரத்தில் அக்கார் முன்னாள் முதல் மந்திரி முப்தி முஹமது சயீது வீட்டை நெருங் கியது.அந்த வீடு அருகே தற்கொலைப்படை தீவிரவாதியால் கார்க்குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டது.

இதனால் அக்கார் வெடித்துச் சிதறியது. இந்த தற்கொலைத்தாக்குதலில் தீவிரவாதி உட்பட காஷ்மீர் பொலிஸார் ஒருவரும் 4 அப்பாவிப் பொதுமக்களும் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தனர். 15 பேர் படுகாயம டைந்தனர்.

முப்தி முஹமது சயீது வீடுஅருகே கார்க் குண்டு வெடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

WORLD NEWS உலக தரிசனம்

இந்தச்சம்பவத்தைத் தொடர்ந்து முலாம் நபிஆசாத் பதவியேற்பு விழாவிற்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கார்க்குண்டு வெடித்த இடம் பதவியேற்பு விழா நடக்க இருக்கும் இடத்தில் இருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில்தான் உள்ளது. (ச-4)



பிரான்ஷ் நாட்டைச்சேர்ந்த வீரர் இமானுவல் காயிண்டர் தன்னந் தனியாக படகில் பசுபிக்பெருங்கடலை கடந்துள்ளார். ஜப்பானில் இருந்து அமெரிக்காவில் ஒரிகான் பகுதிக்கு இவர் 129 நாட்களில் சென்று சாதனை ஏற்படுத்தினார்.

# மகிந்த ராஜபக்ஷ என்னுடன் நேரடி விவாதத்திற்கு வந்தால் இ.தொ.க, மு.காவின் ஒப்பந்தங்கள் பகிரங்கப்படுத்தப்படும்



## ரணில் அறிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ எம்முடன் விவாதத்திற்கு வந்தால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளுடனான ஒப்பந் தங்களை பகிரங்கப்படுத்துவோம் என்று ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக் கிரமசிங்கா அறிவித்துள்ளார்.

மகரையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே ரணில் விக்கிரம சிங்க இவ் வறிவிப்பை வெளியிட்டுள்ளார். அவர் அக்கூட்டத்தில் மேலும் உரையாற்று கையில் இ.தொ.க.,மு.காவுடனான ஒப்பந் தங்களை பகிரங்கப்படுத்த வேண்டுமென்று மகிந்த கோரிக்கை விடுத்து வருகிறார்.

அதேபோல் இனப்பிரச்சினைக்கான தீர் வுத்திட்டங்கள் குறித்தும் அவர் கேள்வி எழுப்பி வருகிறார். எம்முடன் நேரடி விவாதத்திற்கு மகிந்த முன்வந்தால் இரண்டு விடயங்களி லும் அவருக்கு உரிய பதில் அளிக்கப்படும்.

இலங்கையில் வாழும் சிங்களவர் ,தமிழர் ,முஸ்லிம் மக்களுக்கு பொதுவாக இலங் கையர் என்ற அடையாளத்தை ஏற்படுத்து கிற அனைத்து இன மக்களின் அபிலா சைகளை நிறைவு செய்கிற தீர்வுத்திட்டத்தை இனப்பிரச்சினைக்கு நாம் முன்வைக்கிறோம்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவோ சிங்கள வர் என்ற அடிப்படையில் இருந்து இனப்பி ரச்சினைக்கு தீர்வுகாண முயல்கிறார். அது நடைமுறைச்சாத்தியமற்றது.

நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற உட னேயே இந்தியா–இலங்கை இடையேயான தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் முறைப்படுத் தப்பட்டு இந்தியச் சந்தையை இலங்கையர் முழு அளவில் பயன்படுத்துகிற நிலைமை உருவாக்கப்படும்.

வெளிநாடுகளுடன் எமக்கு சுமூக உறவு இருக்கிறது. இதன் மூலம் நாட்டின் பொரு ளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்றார்.

இந்தக்கூட்டத்தில் திரைப்பட நட்சத்திரமான ரவீந்திர ரந்தெனியவும் கலந்துகொண்டு ரணிலுக்கான ஆதரவைத்தெரிவித்தார். அங்கு உரையாற்றிய ரவீந்திர ரந்தெனிய நாட்டின் திரைப்பட விருதுகள் வழங்கப்படு வதே திரைத்துறை மதீப்பீடுகளை அடிப்படை யாக வைத்திருக்க வேண்டுமே தவிர அரசி யல் ரீதியாக இருக்கக்கூடாது. ஆனால் திரைத்துறையிலும் மகிந்த ராஜபக்ஷ அரசியலைத் திணிக்கிறார் என்றார். (ற)

# ஓயாத அலைகள் -3 வெற்றிச்சமரின் 6வது ஆண்டு நிறைவு விழா நேற்று

(கிளிநொச்சி)

ஓயாத அலைகள் 3 வெற்றிச்சமரின் 6 ஆம் ஆண்டுநிகழ்வுகள் நேற்று புதன்கிழமை ஒட்டுசுட்டானில் நடைபெற்றது.

லெப்.கேணல் ராஜன் கல்விப்பிரிவைச் சேர்ந்த ஜெயந்தி தலைமையில் இந்நிகழ் வுகள் தொடங்கியது. பொதுச்சுடரினை மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுசா ஏற்றினார்,தமிழீழ தேசியக் கொடியினை தளபதி ரமேஷ் ஏற்றினார், மாவீரர்களின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரினை முல் லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பா ளர் முகுந்தன் ஏற்றிவைத்தார், தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பி னர் கனகரத்தினம் மலர்மாலை அணிவித் தார்.

தொடர்ந்து சங்கநாதம் குழுவினரின் மாவீரர் வணக்க நடன நிகழ்வு நடைபெற்றது. ஓயாத அலைகள் -3சமரை வழிநடத்திய தளபதிகளில் ஒருவரான தளபதி ரமேஷ் சிறப்புரை நிகழ்த்தினார்,தளபதி சுரேஷ் மற் றும் புகைப்பட மொழியாக்கபிரிவுப் பொறுப் பாளர் துளசிச்செல்வன் ஆகியோர் உரைக ளை நிகழ்தினார், தொடர்ந்து நாடக நிகழ்வு நடைபெற்றது.களத்தில் இருந்து மாவீரர் களும்,போரா ளிகளும் எழுதிய கவிதை நூல் தொகுதியான ' நெருப்பினில் நின்று' நூல் வெளியிடப்பட்டது.இந்நிகழ்விற்கு லெப். கேணல் ராஜன் கல்விப்பிரிவுப் பொறுப் பாளர் கீதன் தலைமை தாங்கினார்.

கவிதை நூலினை தளபதி கேணல் ஜெயம் வெளிட மாவீரர் மேஜர் அமுதாவின் சகோதரி பெற்றுக்கொண்டார். தமிழீழ விடு தலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கா. வே.பாலகுமாரன் வெளியீட்டு உரையினை நிகழ்தினார். (ச-4)

# வடக்கு கிழக்கு வாக்களிப்பு நிலையங்களில் கிராமசேவையாளர்களுக்கு கட்டாய பணி

வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளின் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாக்களிப் பதற்காக நிறுவப்படும் கொத்தணி வாக்க ளிப்பு நிலையங்களில் அந்தந்தப்பிரதேச கிராமசேவையாளர்களை கட்டாயம் ஈடுபடுத் துவதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித் துள்ளார்.

அந்தந்தப்பிரதேச கிராமசேவையாளர் களும் வாக்களிப்பு நிலையங்களில் இருப் பதால் வாக்காளர்களை இனங் காணப்பது இலகுவா இருக்குமென தெரிவிக்கப்படுகிறது. தங்களை உரியவகையில் அடையாளப் படுத்த தவறும் வாக்காளர்கள் வாக்களிப்ப தற்கு முன்னர் மூன்று படிவங்களை நிரப்ப வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(ச-4)

# சச்சின் 34

## மின் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை



ஒருநாள் போட்டிகளில் ஓபனராக விளையாட ஆரம்பித்த பிறகுதான் சச்சினின் கிரிக்கெற் வாழ்க்கையின் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டது. அது வரை அணியில் இன்னொரு பேட்ஸ்மேன் என்கிற சாதாரண நிலையிலேயே வைக்கப்பட்டிருந்த சச்சின் துவக்க நிலையில் ஆடத் துவங்கிய பிறகுதான் இந்தியாவின் முன்னணி பேட்ஸ்மேன்களில் ஒருவராக மதிக்கப்பட்டார். விசேஷமாக கவனிக்கப்பட்டார். முன்பை விட அதிக பந்துகளில் விளையாடி அதிக ரன்கள் எடுத்ததால் பல போட்டிகளை இந்தியாவுக்காக வென்று தர முடிந்தது. சச்சினின் வசீகரமான அதிரடி ஆட்டத்துக்கு உலகெங்கும் ரசிகர்கள் உருவானார்கள். கிரிக்கெற் விதிமுறைகளை மீறி காட்டுத்தனமாக ஆடாமல் நளினமாகவும், அதே சமயத்தில் விரைவாகவும் விளையாகிற சச்சினின் ஆட்டத்திறனை கிரிக்கெற் நிபுணர்கள் பிரமிப்போடு புகழ்ந்தார்கள். சீக்கிரத்திலேயே உலகின் மிகச் சிறந்த பேட்ஸ்மேன் என்னும் பாராட்டும் சச்சினைச் சேர்ந்தது!


அதுமட்டுமில்லை. துவக்க ஆட்டக்காராக வந்து, அதிக பந்துகளைச் சந்தித்து ஆடியதால் தான் சச்சினுக்கு ஒருநாள் போட்டிகளில் சதம் அடிப்பதற்கான வாய்ப்புகள் நிறைய கிடைத்தன. படிப்படியாக உலகிலேயே ஒருநாள் போட்டிகளில் பத்தாயிரம் ரன்கள் சேர்த்த முதல் வீரர் என்னும் பெருமையும் அதிகபட்ச சதங்கள் அடித்த வீரர் என்னும் சாதனையும் சச்சினின் வசமானது!

இவை அனைத்துக்கும் ஆரம்பம் சித்துவின் கழுத்து வலியும், அதனால் கிடைத்த சின்னஞ்சிறு வாய்ப்பை சரியானபடி பயன்படுத்திக் கொண்ட சச்சினின் தன்னம்பிக்கை செயல் திறனும்தான்!

நியூஸிலாந்து தொடரை அடுத்து சிங்கர் கோப்பை போட்டிகளில் விளையாடுவதற்காக இலங்கைக்குப் பறந்தது. இந்திய அணி ஒருநாள் போட்டிகளில் சச்சினின் முதல் சதம் அங்கே காத்திருந்தது!

## 13.அஞ்சலி, சாரா, அர்ஜூன்

1994, செப்ரெம்பர் 9, கொழும்பு பிரேமதாஸா மைதானத்தில் இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான சிங்கர் கோப்பை லீக் போட்டி முக்கியமான இந்தப் போட்டியில் வெல்கிறவர்கள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுகிற வாய்ப்புகள் அதிகரிக்கும் என்கிற நிலைமை!



சச்சினுக்கும் ரசிகர்களுக்கும் வெகுநாட்களாகத்தண்ணிகாட்டிக்கொண்டிருந்த ஒருநாள் சதம் மிகவும் அவசியமான நேரத்தில் இந்திய அணிக்கு உதவியாக வந்தது. அதுவும் வலிமையான ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக! டாஸ் வென்று முதலில்பேட் செய்த இந்திய அணி, ஐம்பது ஓவர்களில் எட்டு விக்கெற் இழப்புக்கு 246 ரன்கள் எடுத்தது. சச்சின் 130 பந்துகளில் 110 ரன்கள் குவித்து தனது முதல் ஒருநாள் சதத்தைப் பூர்த்தி செய்தார். சச்சினின் ஸ்கோரில் எட்டு பவுண்டரிகளும் இரண்டு சிக்ஸர்களும் அடங்கும்!

அடுத்து ஆடிய ஆஸ்திரேலிய அணி, 215 ரன்களுக்கு ஆட்டம் இழக்க இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றது. சச்சின்தான் ஆட்ட நாயகன்!

அடுத்த வாரத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இலங்கையை வென்று சிங்கர் கோப்பையைக் கைப்பற்றியது இந்தியா. ஆனால் அந்தப் போட்டியில் சச்சின் எடுத்த ரன்கள் பூஜ்ஜியம்!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான அடுத்த தொடருக்காக இந்தியா வந்த சச்சினுக்கு மேலும் அதிர்ச்சி காத்திருந்தது பரீதாபத்திலும், மும்பையிலும் நடைபெற்ற முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் சச்சின் ரன் எதுவும் எடுக்கும் முன்பே ஆட்டமிழந்துவிட தொடர்ந்து மூன்று போட்டிகளில் பூஜ்ஜியம் ரன்கள்!

முன்பு சச்சினின் அதிரடியான துவக்க ஆட்டத்தைத் புகழ்ந்த பத்திரிகைகள் இப்போது சச்சினை துவக்க ஆட்டக்காரராக அனுப்பியது சரியில்லை என்பதுபோல் எழுதத் துவங்கின. எல்லாப் பந்துகனையும் முரட்டுத்தனமாக அடிக்கப் பார்க்கிறார் சச்சின். இந்தப் பலவீனத்தை எதிரணிகள் புரிந்து கொண்டு விட்டன. இனிமேல் சச்சின் அவ்வவுதான் என்பதுபோல் சரமாரியாக விமர்சனங்கள் குவிய கேப்டன் அஸாருதீனுக்குக் குழப்பமும் தலைவலியும்.

குறைகண்டுபிடித்தே பேர் வாங்கும் இந்த விமர்சகர்களின் வாயை மூடுவதற்காக ஒரு ஆட்டத்தில் சச்சினைக் கீழே இறக்கிப் பார்ப்போம் என்று தீர்மானித்து அடுத்த போட்டியில் சச்சினை மூன்றாம் நிலைக்குக் கொண்டுவந்தார் அஸார். அந்தப் போட்டியில் சச்சின் எடுத்த ரன்கள் எட்டு! பரோடாவில் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டம் சச்சின் மேலிருந்த நம்பிக்கையில் அவரை மீண்டும் ஓபனராக அஸார் அனுப்பிவைத்தார். அஸாருதீனுக்கும், இந்திய அணிக்கும் நன்றி சொல்லும் விதமாக சச்சின் அன்றைக்கு தனது இரண்டாவது சதத்தை விளாசினார். 136 பந்துகளில் 115 ரன்கள் எடுத்த சச்சின் மீண்டும் ஆட்ட நாயகன்!


(தொடரும்)

## பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழித்தல்

பெண்களுக்கு எதிரான எல்லா வகையான வன்முறைகளையும் இல்லாதொழிப்பதற்கான விழிப்புணர்வு ஒன்றுகூடல் நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது சறோஜா சிவச்சந்திரன், செல்வி சீ.வி.செல்லையா, திருமதி செரின் மில்ரன், செல்வி எஸ்.பத்மா, என். சுகிர்தராஜ் ஆகியோர் கருத்துக்களைப் பகிரவுள்ளனர். இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (அ-7)









நேற்றுக் காலை, குருநகர் சேமக்காலை சந்தியில் உள்ள காவலரணுக்கு முன்னால் வெடிக்காத நிலையில் காணப்பட்ட குண்டு ஒன்றினை முதல் படத்திலும், அதன் காரணமாக போக்குவரத்தை தடை செய்து வீதி மூடப்பட்டுள்ளதான அறிவித்தலை இரண்டாவது படத்திலும், போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ள வீதியையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தெ.திலீப், ச.தவராசா)

## சமுர்த்தித் திட்டம் தற்போது — ஏமாற்றுத் திட்டமாக மாறியுள்ளது

### -சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சமுர்த்தி வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள நிதி யை ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் உதவி பெற வேண்டிய மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக் கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.

வதல்குமர பகுதியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வறுமையை ஒழிக்கும் நோக்கில் சமுர்த்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் இந்தத் திட்டம் தற்போது ஏமாற்றுத் திட்டமாக மாறியுள்ளது.

நாட்டு மக்கள் பெற்ற சமுர்த்தி பெறுபேறு களை விட சமுர்த்தி அதிகாரிகளே இதன்மூலம் அதிகம் நன்மையடைந்துள்ளனர் எனவும் குற்றம் சாட்டியுள்ளார். (ற-9)

பொருளாதார நோக்கங்கள் மட்டும்தான் சமுதாயத்தில் மனிதனின் நடத்தையை நிர்ணயிக்கும் என்று கருதி விடமுடியாது. - ப்ராய்டு

வலம்புரி

## பாட்டுக்கல்ல பக்கவாத்தியம் இரசிகர் கேட்பதற்கல்ல பாட்டு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இருவரில் யார் வெற்றிபெறுவார்கள் என்பதில் ஓர் தெளிவான முடிவை எடுக்கமுடியவில்லை.

ஊடகங்களின் கணிப்பீடுகள் விழுந்தபாட்டில் குறிசுடுவனவாக இருக்கின்றன. அவற்றில் ஓர் நிதானமான போக்கையோ அன்றி சான்றாதாரமான தரவுகளையோ காணமுடியவில்லை.

ஜே.வி.பி, ஹெலஉறுமய ஆகிய இருபிரதான இனவாதக் கட்சிகள் பிரதமர் மகிந்தவுக்கு பக்கவாத்தியம் தெரிவிக்க உடன்பட்டுள்ளன.

மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கத்தில் ஆறுமுகன் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், ரவூப் ஹக்கீமின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் புக்கவாத்தியக் கருவிகளை மீட்டுகின்றன.

மகிந்த - ரணில் என்ற இரண்டு பாட்டுக் கச்சேரியில் யார் முதலிடம் பெறுவார் என்பதைத் தீர்மானிக்கப்போவது வாக்காளர் பெருமக்களே. ஆம் பாட்டுக் கச்சேரியில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதை இரசிகர்களான வாக்காளர்களே தீர்மானிப்பர்.

சரீரம், பக்கவாத்தியம், பாட்டின் கருத்து இவற்றைத் தமது இரசனைப் பொருளாகக்கொண்டு வாக்குகளை வழங்கும் இரசிகர்களும் உண்டு. இது நிதானமாக பாட்டுக் கச்சேரியைக் கேட்கும் இரசிகர்களின் முடிவு.

மாறாக இன்னோர் இரசிகர்கள் மது மயக்கத்தால் பண்எது? பல்லவி எது? என்று தெரியாமல் ஊத்தித் தந்த நன்றிக்கடனைத் தீர்க்கமுற்படுவர்.

காலாகாலமாக நடக்கும் சம்பிரதாயத்தைச் செய்வதில் பாட்டுக்கோஷ்டிகள் பின்னடிக்கவோ அல்லது பெருங்குடி இரசிகர்கள் தமது பாகத்தை வாங்கிக்கொள்ள மறுக்கவோ போவதில்லை. எல்லாமே நடந்துமுடியும். இந்த இரண்டிற்கும் அப்பால் பக்கவாத்தியக் கோஷ்டிகளும் தத்தம் கடமைக்காக மதிலேறி விழுந்து பூசியமையை அழித்து தாம் பக்கவாத்தியம் வாசிக்கும் பாடகரை வெல்ல வைப்பதற்காக பாடாய்ப்பாடுபடுவர்.

முடிவு அறிவிக்கும் வரை உள்ளே போனது முடியும்வரை சூடுபிடித்த தேர்தல் தணியாது அனல்கக்கும். முடிவுக்குப் பின்னரும் முறையற்ற வாக்குகள் என்று முறையீடு செய்யும் கடமையும் தோற்றவர் பக்கத்தில் நிறைவேறும்.

அம்மட்டும்தான், வென்றவர் என்ன செய்வார்? அவரால் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமா? நாடெங்கிலும் கொலை, கொள்ளை, அமைதிக்குப் பங்கம் என்று அபாயங்கள் அதிகரித்துச் செல்வதை வென்றவர் தடுத்துக்கொள்வாரா? இதுபோன்ற கேள்விகள் தேர்தலுக்குப் பின்னரே வாக்காள இரசிகர்களிடம் எழும்.

என்னசெய்வது நிதானமிழந்து போட்ட புள்ளிகளால் புனிதமானவரைத் தெரிவுசெய்யவா? முடியும். இப்போது வென்றவரின் பாடல்கள் பக்கவாத்தியத்திற்கு அமைய இசைக்கப்படும்.

ரசிகர்கள் விரும்பினால் கேட்கலாம். இல்லாவிட்டால்... எழுந்தும் போகலாம்.

அட, அங்கே ஓர் கூட்டம் அமைதியாகப் புள்ளடியிடாமல் பாட்டாவது - பணியாரமாவது என்று இருக் கிறதே. வெல்லப்போவது அவர்களே!

# ஐ. தே. கவின் கோரிக்கைகளை ஏற்று பட்ஜெட் நவ.8இல் சமர்ப்பிப்பு இரத்து?

## ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி வரவு செலவுத்திட்ட அறிக்கை தாக்கல் செய்வதை கைவிடும முடிவை எந்த நேரத்திலும் அரசாங்கம் அறிவிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் வரவு செலவுத்திட்ட அறிக்கையை இறுதிப்படுத்தும் பணிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. எதிர்வரும் 8ஆம் திகதி வரவு செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்வதைக் கைவிடுமாறு வலியுறுத்தி ஜனாதிபதிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித தலைவர் கருஜெயசூரிய கடிதம் அனுப்பியிருந்தார்.

இதற்குப் பதில் கடிதம் அனுப்பிய ஜனாதிபதி ஐ.தே.க தொிவித்திருந்த யோசனைகளை பரிசீலிக்குமாறு நிதியமைச்சருககு தாம் பரிந்துரைத்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடுகள் தொடர்பாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுக்கும் ஜனாதிபதி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதைத் தொடர்ந்து வரவு செலவுத்திட்ட அறிக்கையை திருத்தங்களுடன் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமைகள் குறித்து கருத்துத் தெரிவித்த நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, ஜனாதிபதியிடம் இறுதி அறிக்கையை கையளிப்பதற்கு முன்பாக பல்வேறு அம்சங்கள் குறித்து அதிகாரிகளுடன் விவாதிக்க வேண்டியுள்ளது. வரவு செலவுத்திட்டம் தாக்கல் தொடர்பாக அனைத்து உத்தியோகபூர்வமான நடைமுறைகளை எமது அமைச்சு மேற்கொண்டு வருகிறது என்றார்.

அதேநேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கோரிககையை ஏற்று நவம்பர் 8ஆம் திகதி அன்று வரவு செலவுத்திட்ட அறிக்கை தாக்கல் செய்வதை கைவிடக் கூடும் என்றும் ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுடனும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் ஆலோசனை நடத்தி வருவதாகவும் தொிவிக்கப்படுகிறது.

ஐ.தே.கவின் எதிர்ப்பை மீறி வரவு செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்படும் நிலையில் அன்றைய நாளில் நாடாளுமன்ற புறக்கணிப்புப் போராட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி நடத்தக்கூடும் என்றும் தெரியவருகிறது.

இந் நிலையில் தனியார் துறை கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் இலங்கைத் தொழில் வர்த்தக கூட்டமைப்பினரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக வரவு செலவுத்திட்ட அறிக்கை தாக்கல் செய்வது சரியானது அல்ல என்று கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கும்— பொலிஸ்மா அதிபருக்குமிடையில் முறுகல்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபருக்கும் தேசிய பொலிஸ் ஆணைக் குழுத் தலைவருக்கும் இடையே முறுகல் நிலை தீவிரமடைந்துள்ளது.

பொலிஸார் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளை தேசிய பொலிஸ் ஆணைக்குழு மேற்கொண்ட போதும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அதன் நடவடிக்கைகளை பொலிஸ்மா அதிபா சந்திரா பெர்னாண்டோ தொடர்ந்து விமர்சனம் செய்து வருகிறார்.

இந்நிலையில் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின தலைவர் ரஞ்சித் அபேயசூர்ய இது தொடர்பில் கூறியுள்ளதாவது, பொலிஸ் துறையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசியல் யாப்பு எமக்கு முழுமையான அதிகாரம அளித்துள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலர் திலக் ரணவிராஜ இது தொடர்பில் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் மீதான நடவடிக்கைகளை நாம் தனிப்பட்ட முறையில் செய்யவில்லை. அரசியல் யாப்பு சபையின் முடிவின் படியே செய்து வருகிறோம். பொலிஸ்மா அதிபரை விட எமக்கே கூடுதல் அதிகாரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் பணிக்காலம் இம மாதத்துடன் முடிவடையவுள்ளது.

இந்த அமைப்புக்கான கால நீட்டிப்பை அரசாங்கம் அளித்தால் தொடர்ந்து நாம் கடமையாற்றுவோம் என்றார் அபேயசூர்ய. (ற)

# வட-கிழக்குக்கு மட்டுமல்லாது தென் மாகாணத்துக்கும் சுயாட்சி

## -மஹிந்த விஜயசேகர கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் அதிகாரப் பகிர்வு என்பது வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு மட்டுமல்லாது ஸ்ரீலங்காவின் தென் மாகாணத்திற்கும் வழங்கப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மஹிந்த விஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் மஹிந்த விஜயசேகர இது தொடர்பில் மேலும் கூறுகையில், அதிகாரப் பகிர்வு என்பது இனப் பிரச்சினைக்கு மட்டும் தீர்வு அளிப்பது அல்ல. ஒட்டுமொத்த நாட்டின் அபிவிருத்திக்கும் உதவக் கூடியது. இத்தகைய அதிகாரப் பகிர்வு என்பது இயற்கை வளங்கள் அதிகமுள்ள தென்மாகாணத்திற்கும் வழங்கப்பட வேண்டும்.

தென்மாகாணத்திற்கு விரிவான சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட்டால் தென்மாகாண இயற்கை வளங்களை முழுவீச்சில் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியும்.

நாட்டில் வறுமை நிலையை உருவாக்கியதும் ஜே.வி.பியின் கொள்கைகள் வெற்றி பெறுவதற்கான களம் அமைத்துக் கொடுத்ததும்தான் ஐக்கிய மக்கள் சுதநதிரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் சாதனையாக இருக்கிறது என்றார். (ற)

## மட்டு.இல் இராணுவத்தினரின் சோதனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் இராணுவம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இது தொடர்பில் தெரிவிக்கையில், இராணுவம் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட இந்தக் கடும் சோதனை நடவடிக்கையானது பாரிய யுத்த நிறுத்த மீறல் அடிப்படை மனித உரிமை மீறல் நடவடிககையாகும். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில் இதுபோன்ற நடவடிக்கைகளை இராணுவம் மேற கொணடிருப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

எமது விசனத்தைத் தெரிவிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்புகிறோம். இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கையால் மட்டக்களப்பு மக்களிடத்தில் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது என்றார்.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாமாங்கம், ஜெயந்திரபுரம், இருதயபுரம் மற்றும் ஊரணி பிரதேச மக்களை பொது மைதானத்தில் நிற்க வைத்து இராணுவமும் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுவினரும் கடும் சோதனைக்குள்ளாக்கினர்.

இராணுவச் சீருடையுடன் முக மூடி அணிந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட ஆயுதக் குழுவினர் 20 தமிழ இளைஞர்களையும் இராணுவத்திடம் காட்டிக் கொடுத்தனர். அவர்கள் அனைவரும் விசாரணைக்குட் படுததப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையில் ஆயுதங்களை கைப்பற்றியதாக இராணுவமும் பொலிஸாரும் தெரிவித துள்ளனர். (ற)



## சாயி அருளமுதம்

உங்களுடைய எல்லாச் சொத்துக்களையும் திரவியங்களையும் உங்களுக்கு இறைவன் நல்கிய நம்பிக்கை ஒப்படைப்புப் பொருளாகக் கருதுங்கள். நீங்கள் அன்பு பாலித்து ஆதரித்து வழிகாட்டுவதற்கு இறைவனால் கொடுக்கப்பட்ட ஒரு புனிதமான நம்பிக்கை ஒப்படைப்பாகவே உங்கள் குடும்பத்தையும் கருத வேண்டும். இவ்வாறு உங்கள் பற்றினை வணக்கமாக உயர்வுபடுத்தி ஆத்மீக முன்னேற்றத்திற்கு அதை ஒரு கருவியாக்க வேண்டும்.

நாளாந்த நற்சிந்தனை



ஓயாத அலைகள் -3 சமரின் வீரச்சாவடைந்த சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணியின் சிறப்புத்தளபதி லெப்.கேணல் ராகவனின் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில், கடற்புலிகளின் பொறுப்பாளர்களில் ஒருவரான இனியவன் பொதுச்சுடரினை ஏற்றுவதையும், படையணியின் ஆசிரியர் தென்னரசன் உருவப்படத்திற்கான சுடரை ஏற்றுவதையும் , தாச்சிப்போட்டியில் வெற்றியீட்டிய சிறப்பு படையணி ராகவன் வெற்றிக்கிண்ணத்தை பெறுவதையும் படங்களில் காணலாம்.

# விண்ணப்பிக்காத 22பேருக்கு தபால் மூலம் வாக்களிக்க அனுமதி

(கொழும்பு)

தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்காத தற்போது ஹெய்ட்டியில் இருக்கும் இராணுவவீரர் ஒருவருக்கும் 21 விவசாயிகளுக்கும் தபால் மூலம் வாக்களிக்க அனுமதிக்கும் ஆவணங்கள் கிடைத்துள்ளதாக மொனராகலை உதவித்தேர்தல் ஆணையாளர் எம்.ஏ. லலித் ஆனந்த தெரிவித்துள்ளார்.

அவருக்கு தபால் மூலம் வாக்களிக்க அனுமதி கிடைத்துள்ளது என்றும், தேர்தலுக்கு முன்னர் தமது கணவர் நாடுதிரும்பினால் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க தனது கணவரை அனுமதிக்குமாறு தான் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவரது மனைவி கூறியுள்ளார்.

அத்துடன் தபால் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பிக்காத 21விவசாயிகளுக்கும் அதற்கான அனுமதி கிடைத்துள்ளது. இது குறித்து தான் ஆராய்ந்து பார்த்துவிட்டு குறிப்பிட்டவர்களுக்கு தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்கத்தேவையான ஒழுங்குகளை செய்து கொடுக்கவுள்ளதாக உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (ச-4)

# எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தபால் நிலையம் திறந்திருக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்காக இம் மாதம் 6ஆம் திகதியை தபால் திணைக்களம் விசேட தினமாக அறிவித்துள்ளது.

தேர்தலுக்கு முன்னதாக சகல வாக்காளர்களுக்கும் வாக்களார் அட்டைகளை விநியோகிக்கும் நோக்கிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக தபால்மா அதிபர் சேலின் சேனாதி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை என்பதினால் அன்றையதினம் சலக வாக்காளர்களும் தமது இல்லங்களில் இருப்பார்கள். அன்று வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பது இலகுவாக இருக்கும்.

இவ்வாரத்தில் இரண்டு நாட்கள் அரச விடுமுறை தினமாக காணப்படுவதனால் வாக்காளர் அட்டை விநியோகம் உட்பட தபால் சேவைகளும் நடைபெற்றன.

இதேவேளை தேர்தலில் தொடர்புடைய தபாலில் அனுப்பப்படும் ஆவணங்கள் எந்த வித பிரச்சினைகளும் இன்றி விநியோகிக்கப் படுவதாகவும் தபால்மா அதிபர் தெரிவித்தார். (ச-8)

# மட்டக்களப்பில் நேற்று...

ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சம்மாந்துறைவாசியான ராஜா எனப்படும் ஐயாத்துரை கணேசவேல் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அருகில் உள்ள குளத்தில் அவர் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் இச்சம்வம் இடம்பெற்றுள்ளது. (ச-4)

# யாழ்ப்பாணத்தில் ...

கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இதில் ஒருவர் காயமடைந்தார் இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-4-8-52)

# குருநகரில் நேற்று கைக்குண்டு வீச்சு

(குருநகர்)

யாழ்ப்பாணம்-குருநகர் சேமக்காலைச் சந்தியில் உள்ள இராணுவக் காவலரணை நோக்கி நேற்றுக்காலை கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது.

எனினும் அக்குண்டு வெடிக்கவில்லை. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களாலேயே இக்கைக்குண்டு வீசப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். இச்சம்பவத்தினையடுத்து அப்பகுதியில் உள்ள சில வீதிகள் பாதுகாப்பிற்காக இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்தது. (ச-4)

# தேர்தல் கண்காணிப்பில்...

பல பகுதிகளில் தொடர்ந்து கொலைகளும் வன்முறைகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த வன்முறைகளை ஐப்பானிய அரசாங்கம் வன்மையாக கண்டிக்கின்றது. இவ்வாறனா வன்முறைகள் நடைபெறப்போகும் ஜனாதிபதித்தேர்தலுக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும்.

மொத்தவாக்காளர்களில் 60 வீதமானவர்களிடம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தெளிவின்மை காணப்படுகிறது என்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

கண்காணிப்பு கடமைகளில் ஈடுபடும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் , பவ்ரல் அமைப்பு என்பவற்றுக்கு இப்பணம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இது தொடர்பான உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்பட்டன. ச-8)

# கண்காணிப்புக்...

உளவாளிகள் மூலமாக வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை தாங்கள் அறிந்துவருவதாகத் தெரிவித்த இராணுவ உளவுப் பிரிவினர், இராணுவப் புலனாய்வுப் பிரிவை சீர்குலைக்க இப்படியான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச-4)


## 6 ஆம் வருட நெஞ்சகலா நினைவலைகள்

மண்ணுலகில் 1929 01 31

விண்ணுலகில் 1999 11 09



திதி 03.11.2005

## அமரர் ஆறுமுகம் செல்லையா

(முன்னைநாள் மட்டுவில் கொத்தணி அதிபர்)

அன்பாலே அரவணைத்து அறிவோடும்
பண்போடும் எமக்கு வழிகாட்டி
எம்மை ஆளாக்கி வாழவைத்த
அன்புத் தெய்வமே! ஆருயிர் அப்பாவே!
நீங்கள் காட்டிய வழியில்
ஆண்டுகள் ஆறு ஆனாலும்
ஆறவில்லை அப்பா எம் துயரம்
எப்போது காண்போம் உங்கள் அன்பு முகத்தை?
ஏங்கித் தவித்து நிற்கின்றோம்.

"நேசவாசம்" மட்டுவில் தெற்கு, மட்டுவில்

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்

(C-1814)


# அரச ஊடகங்களில்....

அரசாங்க ஊடகங்கள் எமக்கு வழங்கும் சந்தர்ப்பத்தை விட பிரதமர் மகிந்தவிற்கு வழங்கும் நேரம் அதிகம் என்று சுயாதீன ஆய்வாளர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எமக்கு வழங்கப்படும் காலம்,முறைமை,உள்ளடக்கம் என்பன எமக்கு பிரதிகூலமாகவே காணப்படுகின்றது.

நாம் நாடெங்கிலும் மக்களுடன் நடாத் திய கலந்துரையாடல் தொகுதியை ஒளிபரப்ப ரூபவாகினி தொலைக்காட்சியிலும் சுயாதீன தொலைக்காட்சியிலும் நேரத்தை ஒதுக்கீடு செய்ய முயன்றபோதும் அதற்கான சந்தர்ப் பம் கிடைக்கவில்லை.

இந்நிலையில் ஜனநாயக ரீதியிலான நிகழ்ச்சிகளை வழங்குவது தொடர்பாக அர சாங்கம் ஊடகங்களின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கு ஊடக அமைச்சர் என்ற வகையில் தெளிவுபடுத்துவது அவசியம் என்று அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4,8)

# ஐரோப்பிய ஒன்றியத்...

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு ஜனாதிபதித்தேர்தல் மூலம் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

ஆகவே நாம் வாக்காளர்களை வாக்களிக்குமாறு வற்புறுத்த மாட்டோம்; தடை விதிக்கவும் மாட்டோம் என அவர் தெரிவித் துள்ளார்.

கடந்த தேர்தல் காலத்தில் எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் வாக்காளர்களின் நன்மை கருதி போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால் இம்முறை ஜனாதிபதித்தேர்தலின்போது வாகன வசதிகளை வழங்க மாட்டோம். வாக்காளர்கள் விரும்பினால் தமது சொந்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

அத்தோடு வாக்களிப்பதற்காக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் போது வாக்களித்து விட்டு திரும்பும் போது வழமையான சோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள குறைகள் குறித்து நோர்வே தூதுவர் புலிகளுக்கு அறிக்கையொன்றையும் சமர்ப்பித்துள்ளனர். (ச-4)












இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.